2018 – 2019 +1 வணிகவியல் 2,3,5 மார்க் வினா விடைகள்

அத்தியாயம். 2. தொழிலின் நோக்கங்கள்

1. மனிதச் செயல்பாடுகள்: மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று கூறலாம்.

2. மனித செயல்பாடுகளின் வகைகள்: மனிதச் செயல்பாடுகள், பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

3. பொருளாதாரச் செயல்பாடுகள்: இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.

4. பொருளாதாரச் செயல்பாடுகளுக்கு எடுத்துக்காட்டுகள்

1. தயாரிப்பாளர்களால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது
2. வியாபாரிகளால் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவது
3. சில்லறை வியாபாரிகளால் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது
4. மருத்துவர்களால் வழங்கப்படும் மருத்துவ ஆலோசனைகள்
5. பட்டயக் கணக்காளர்களால் வழங்கும் கணக்கியல் சேவைகள்

5. பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்

சமூக மற்றும் உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் எனலாம்.

இதன் நோக்கம் இலாபம் ஈட்டுவதாக இருக்காது.

6. பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளுக்கு எடுத்துக்காட்டுகள்

1. குடும்பத்திற்கு உணவு சமைப்பது
2. விழாக்கள் கொண்டாடுவது
3. திரை அரங்கங்களில் திரைப்படம் பார்ப்பது
4. தியானம் செய்வது

7.பின்வருவனவற்றில் எது பொருளாதார செயல்பாடு எது பொருளாதார சார்பற்ற செயல்பாடு என வகைப்படுத்துக

1. தமிழக அரசு நமது கலைப்பிரிவு மாணவர்களுக்கு வழங்கும் CA பயிற்சி
2. கேரள மாநிலத்தில் திருச்சூரிலுள்ள சைதன்யா NEET பயிற்சி
3. திருச்சியிலுள்ள Naga Institute CA பயிற்சி
4. தமிழக அரசு தொடுவானம் நிகழ்ச்சி மூலம் வழங்கும் NEET பயிற்சி

8. பொருளாதார நடவடிக்கைகளின் வகைகள் யாவை?

அ. வேலை

ஆ. சிறப்புத்தொழில்

இ. தொழில்

9. வேலை: வேலை என்பது கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி ஆற்றுவது ஆகும். மற்றவர்களை பணியமர்த்துபவர் பணியமர்த்துநர் என்றும், அவரால் பணியமர்த்தப்பட்டவர்கள் பணியாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

10.வேலையின் இயல்புகள்:

பணியமர்த்துபவருக்கும் பணியாளருக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கும்.

பணியாளர் அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் தனக்களிக்கப்பட்ட பணியினை நிறைவேற்றுகிறார்.

பணியாளர் வழங்கும் பணியின் மதிப்பளவிற்கு அவருக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

ஒரு பணியாளர் தன்னை பணியமர்த்திய அமைப்பின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பணியாற்றவேண்டும்.

11. சிறப்புத் தொழில்: சிறப்புத் தொழில் என்பது அந்தந்த துறையால் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள்ஆகும்.

வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணியினை சிறப்புத்தொழில் எனலாம்.

12. சிறப்புத் தொழிலின் இயல்புகள்: சிறப்புத் தொழில் புரிவோர் அத்துறையில் சிறப்பறிவு பெற்றவராக இருப்பார்கள்.

அவர்கள் அத்துறையில் முறையானகல்வியறிவு பெற்றிருப்பர்.

இச்சிறப்புத் தொழில் புரிவோர் அவர்களை நெறிப்படுத்தும் அமைப்பின் நடத்தைவிதிகளுக்கு உட்பட்டு சேவை புரிவார்கள்.

சிறப்புத் தொழில் புரிவோர் வழங்கும் பணிகளில் சேவை நோக்கம் மேலோங்கி இருக்கும்.

13. தொழில்: இலாபம் ஈட்டும் நோக்குடன் பொருட்களையும், பணிகளையும், உற்பத்தி, விநியோகம், கொள்முதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை வழக்கமாக மேற்கொள்ளும் செயல்முறையாகும்.

14. தொழிலின் இலக்கணம்: ஜேம்ஸ் ஸ்டீபன்சன் என்பவரது வரைவிலக்கணப்படி "தொழில் என்பது இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை ஆகும்".

ஹேனே என்பவரது வரைவிலக்கணப்படி "தொழில் என்பது பொருள்களை வாங்கி விற்பதன் மூலம் செல்வம் சேர்க்கும் மனித நடவடிக்கைஆகும்".

15. தொழில் நடவடிக்கைகளின் வகைகள்

தொழில் செயல்பாடுகளை அளவு, உரிமை மற்றும் பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

1. தொழில் அளவு அடிப்படையில்

அ. சிற்றளவு தொழில்கள்

ஆ. பேரளவு தொழில்கள்
2. உரிமை அடிப்படையில்
அ. தனியார் நிறுவனங்கள்
ஆ. பொது நிறுவனங்கள்
இ. இணைநிறுவனங்கள்
3. பணிகள் அடிப்படையில்
அ. உற்பத்தித் தொழில் (Industry)
ஆ. வணிகம் (Commerce)
16. சிற்றளவு தொழில்கள்: சிற்றளவு தொழில்களுக்கு குறைந்தமூலதனம் தேவைப்படும்.
இவற்றிற்கு குறைந்த அளவு பணியாளர்கள் மட்டுமே போதும்.
குறைவான அளவிற்கு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
எடுத்துக்காட்டு : கைத்தறி நெசவு
17. பேரளவு தொழில்கள்: பேரளவு தொழில்களுக்கு அதிக மூலதனம் தேவை.
மற்றும் அதிக பணியாளர்கள் பயன்படுத்தி பேரளவு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
எடுத்துக்காட்டுகள்:
ஜவுளி தொழிற்சாலை (ரேமண்ட், ராமராஜ் காட்டன்)
உணவு எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை (சன்பிளவர், சபோலா)
18. தனியார் நிறுவனங்கள்: தனி நபரால் / தனி நபர்களால் உருவாக்கப்பட்டு, நிர்வாகம், கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட யாவும் மேற்கொள்ளும் தொழில் அமைப்புகள் தனியார் நிறுவனங்கள் எனலாம்.
இது அரசால் உருவாக்கப்பட்டது அல்ல.
எடுத்துக்காட்டுகள் :
தனியாள் வணிகம் / (சுந்தர் எழுது பொருள் அங்காடி)
கூட்டாளி நிறுவனம் (ரமேஷ் பிரதர்ஸ்)
19. பொத்துறை நிறுவனங்கள் (Public Enterprises)
அரசாங்கத்தின் மூலமாக அல்லது அரசின் அதிகாரம் பெற்ற முகமை மூலமாக உருவாக்கப்பட்டு சட்டத்தால் நடத்தப்படும் தொழிலமைப்புகள் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகும்.
பொதுத்துறை தொழிலமைப்பின் வடிவங்களாவன.
1. துறைவாரி அமைப்பு (பொதுப் பணித்துறை)
2. பொதுக் கழகம் (இயற்கை மற்றும் எரிவாயு கழகம்)
3. அரசு நிறுமம் (மாநில வாணிகக் கழகம்)
20. இணை நிறுவனங்கள் (Joint Enterprises)
அரசும், தனி நபரும் ஒருங்கிணைந்து உருவாக்கி ஒரு தொழிலமைப்பை கட்டுப்படுத்தும் தொழிலமைப்புகள் இணை நிறுவனங்கள் ஆகும்.
எடுத்துக்காட்டு: மாருதி சுசூகி
21.உற்பத்தித் தொழில் (Industry)
நுகர்வுச் சார்ந்த அனைத்து பொருட்களையும் உற்பத்ரி செய்தல், ஒன்று சேர்த்தல் மற்றும் அனைத்து தயாரிப்பு நிலைகளையும் உள்ளடக்கிய செயல்பாடுகளையும் உற்பத்தித் தொழில் என்கிறோம்.
எடுத்துக்காட்டுகள்:
ரொட்டி, வெண்ணெய், காலணிகள் மற்றும் மூலதனப் பொருட்கள் (இயந்திரங்கள்) தயாரிக்கும் நிறுவனங்கள்
22. வணிகம் (Commerce)
உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோர்களுக்கு பொருட்கள்எவ்வித தங்கு தடையுமின்றி எளிதாக சென்று உதவும் அனைத்தும் நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது வணிகம் ஆகும்.
23. தொழிலின் தன்மைகள் (Characteristics of Business)
அ. பொருட்களை உற்பத்தி செய்தல் / திரட்டுதல்
ஆ. விற்பனை (அ) பரிமாற்றம்
இ. பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்புடையது
ஈ. ஒழுங்கு முறையில் தொடர்புடையது
உ. இலாப நோக்கம்
ஊ. இடர்பாட்டிற்கான கூறு
24. தொழிலின் நோக்கங்கள் யாவை:
அ. பொருளாதாரக் குறிக்கோள்கள்
ஆ. சமூகக் குறிக்கோள்
இ. நிறுவனக் குறிக்கோள்
ஈ. மனிதக் குறிக்கோள்
உ. தேசியக் குறிக்கோள்
25. பொருளாதார நடவடிக்கைகளின் வகைகள் விவரி
அ. வேலை
ஆ. சிறப்புத்தொழில்
இ. தொழில்
அ. வேலை
வேலை என்பது கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி ஆற்றுவது ஆகும்.

மற்றவர்களை பணியமர்த்துபவர் பணியமர்த்துநர் என்றும், அவரால் பணியமர்த்தப்பட்டவர்கள் பணியாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

மேலாளர்கள், எழுத்தர்கள், வங்கி அலுவலர்கள், தொழிற்சாலை வேலையாட்கள் ஆகியோர் பணியாளர்களுக்கு உதாரணம் ஆகும்.

இயல்புகள்

பணியமர்த்துபவருக்கும் பணியாளருக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கும்.

பணியாளர் அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் தனக்களிக்கப்பட்ட பணியினை நிறைவேற்றுகிறார்.

பணியாளர் வழங்கும் பணியின் மதிப்பளவிற்கு அவருக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

ஒரு பணியாளர் தன்னை பணியமர்த்திய அமைப்பின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பணியாற்றவேண்டும்.

ஆ. சிறப்புத் தொழில்

சிறப்புத் தொழில் என்பது அந்தந்த துறையால் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள்ஆகும்.

வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணியினை சிறப்புத்தொழில் எனலாம்.

வேலை என்பதைவிட சிறப்புத் தொழில் மேம்பட்டது ஆகும்.

இயல்புகள்

சிறப்புத் தொழில் புரிவோர் அத்துறையில் சிறப்பறிவு பெற்றவராக இருப்பார்கள்.

அவர்கள் அத்துறையில் முறையானகல்வியறிவு பெற்றிருப்பர்.

இச்சிறப்புத் தொழில் புரிவோர் அவர்களை நெறிப்படுத்தும் அமைப்பின் நடத்தைவிதிகளுக்கு உட்பட்டு சேவை புரிவார்கள்.

சிறப்புத் தொழில் புரிவோர் வழங்கும் பணிகளில் சேவை நோக்கம் மேலோங்கி இருக்கும்.

இ. தொழில்

தொழில் என்பது இலாபம் ஈட்டும் நோக்குடன் பொருட்களையும், பணிகளையும், உற்பத்தி, விநியோகம், கொள்முதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை வழக்கமாக மேற்கொள்ளும் செயல்முறையாகும்.

26. தொழில் நடவடிக்கைகளின் வகைகள் விவரி

தொழில் செயல்பாடுகளை அளவு, உரிமை மற்றும் பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

1. தொழில் அளவு அடிப்படையில்

அளவின் அடிப்படையில் தொழில் செயல்பாடுகள் இருபெரும் பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை

அ. சிற்றளவு தொழில்கள்

ஆ. பேரளவு தொழில்கள்

அ. சிற்றளவு தொழில்கள்

சிற்றளவு தொழில்களுக்கு குறைந்தமூலதனம் தேவைப்படும்.

இவற்றிற்கு குறைந்த அளவு பணியாளர்கள் மட்டுமே போதும்.

குறைவான அளவிற்கு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

எடுத்துக்காட்டு : கைத்தறி நெசவு

ஆ. பேரளவு தொழில்கள்

பேரளவு தொழில்களுக்கு அதிக மூலதனம் தேவை.

மற்றும் அதிக பணியாளர்கள் பயன்படுத்தி பேரளவு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

எடுத்துக்காட்டுகள்:

ஜவுளி தொழிற்சாலை (ரேமண்ட், ராமராஜ் காட்டன்)

உணவு எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை (சன்பிளவர், சபோலா)

2. உரிமைஅடிப்படையில்

தொழில்கள் உரிமை அடிப்படையில் மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகிறது.

அ. தனியார் நிறுவனங்கள்

ஆ. பொது நிறுவனங்கள்

இ. இணைநிறுவனங்கள்

அ. தனியார் நிறுவனங்கள் (Private Enterprises)

தனி நபரால்/தனி நபர்களால் உருவாக்கப்பட்டு, நிர்வாகம், கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட யாவும் மேற்கொள்ளும் தொழில் அமைப்புகள் தனியார் நிறுவனங்கள் எனலாம்.

இது அரசால் உருவாக்கப்பட்டது அல்ல.

எடுத்துக்காட்டுகள் :

தனியாள் வணிகம் / (சுந்தர் எழுது பொருள் அங்காடி)

கூட்டாளி நிறுவனம் (ரமேஷ் பிரதர்ஸ்)

ஆ. பொத்துறை நிறுவனங்கள் (Public Enterprises)

அரசாங்கத்தின் மூலமாக அல்லது அரசின் அதிகாரம் பெற்ற முகமை மூலமாக உருவாக்கப்பட்டு சட்டத்தால் நடத்தப்படும் தொழிலமைப்புகள் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகும்.

பொதுத்துறை தொழிலமைப்பின் வடிவங்களாவன.

1. துறைவாரி அமைப்பு (பொதுப் பணித்துறை)
2. பொதுக் கழகம் (இயற்கை மற்றும் எரிவாயு கழகம்)
3. அரசு நிறுமம் (மாநில வாணிகக் கழகம்)

இ. இணை நிறுவனங்கள் (Joint Enterprises)

அரசும், தனி நபரும் ஒருங்கிணைந்து உருவாக்கி ஒரு தொழிலமைப்பை கட்டுப்படுத்தும் தொழிலமைப்புகள் இணை நிறுவனங்கள் ஆகும்.
எடுத்துக்காட்டு: மாருதி சுசூகி

3. பணிகள் அடிப்படையில்

பணிகள் அடிப்படையில் தொழிற் செயல்பாடுகள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறது.

அ. உற்பத்தித் தொழில் (Industry)

நுகர்வுச் சார்ந்தஅனைத்து பொருட்களையும் உற்பத்ரி செய்தல், ஒன்று சேர்த்தல் மற்றும் அனைத்து தயாரிப்பு நிலைகளையும் உள்ளடக்கிய செயல்பாடுகளையும் உற்பத்தித் தொழில் என்கிறோம்.
எடுத்துக்காட்டுகள்:
ரொட்டி, வெண்ணெய், காலணிகள்மற்றும் மூலதனப் பொருட்கள் (இயந்திரங்கள்) தயாரிக்கும் நிறுவனங்கள்

ஆ. வணிகம் (Commerce)

உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோர்களுக்கு பொருட்கள்எவ்வித தங்கு தடையுமின்றி எளிதாக சென்று உதவும் அனைத்தும் நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது வணிகம் ஆகும்.

27. தொழிலின் தன்மைகள் (Characteristics of Business)

அ. பொருட்களை உற்பத்தி செய்தல் / திரட்டுதல்

மனிதத் தேவையைபூர்த்தி செய்ய பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது ஒன்று திரட்டல் வேண்டும்.

ஆ. விற்பனை (அ) பரிமாற்றம்

தொழிலின் மிக முக்கிய தன்மை என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் அல்லது பரிமாற்றம் செய்தல் ஆகும்.
தனிநபர் தன்னுடைய சுய தேவைக்காக துணியைநெய்தல் அது தொழில் செயல்பாடு ஆகாது.

இ.பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்புடையது

பொருட்கள் உற்பத்தி செய்தல் / திரட்டுதல் என்பது நுகர்வு பொருட்களான துணி, பேனா, பிரஷ், பைகள் ஆகியவற்றையும் உற்பத்தி பொருட்களான இயந்திரம் சார்ந்ததாகும்.
சேவைகள் என்பது மின்சாரம், எரிவாயு, குடிநீர் வழங்குதல் போக்குவரத்து, வங்கி, காப்பீடு தொடர்புடையதாகும்.

ஈ. ஒழுங்கு முறையில் தொடர்புடையது

தனிப்பட்டமுறையில் வாங்கி விற்பது என்பது தொழிலாகாது. தொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.
உதாரணமாக ஒருவர் தன்னுடைய சொந்தப் பயன்பாட்டிற்கு இரு சக்கர மோட்டார் வாகனத்தை வாங்கி குறிப்பிட்ட காலம் கழித்து அதை இலாபத்திற்கு விற்று விட்டால் அது தொழிலாகாது.
பொருட்களை வாங்கி விற்கும் செயல்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தால் மட்டுமே அதை தொழிலாக கருத முடியும்.

உ. இலாப நோக்கம்

தொழிலின் மிக முக்கியத் தன்மை இலாபம் ஈட்டுவது ஆகும்.
மனித இனம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்துக் கொண்டு தன்னுடைய பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தினால் தொழில் எனலாம்.
சிலர் இலாபம் ஈட்டும் நோக்குடன் அதிக நபர்களை தொழிலில் ஈடுபட வைக்கிறது.

ஊ. இடர்பாட்டிற்கான கூறு

தொழிலில் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றதாகும்.
ஒரு வகையில் தன்னுடைய தொழிலைதிறம்படநிர்வாகம் செய்தாலும் இலாபம் என்பது மற்ற காரணிகளை சார்ந்து உள்ளது.
அவையாவன, நுகர்வோர் விருப்பு வெறுப்பு, மூலப்பொருள் பற்றாக்குறை, போக்குவரத்து சிக்கல், மின்சாரப் பற்றாக்குறை ஆகியனஆகும்.
இதன் மூலம் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றது ஆகும்.
எனவே தான் இலாபம் ஈட்டுதல் என்பது இடர்பாட்டை எதிர் கொள்வதற்கான வெகுமதியாக கருதப்படுகிறது.
ஆகவே தொழில் செயல்பாடுகள்யாவும் இடர்பாடுகளைஉள்ளடக்கியதாகும்.

28. தொழிலின் நோக்கங்கள் (Objectives of Business)

ஒவ்வொரு தொழில் நிறுவனமும் தனக்கென குறிக்கோள்களை வகுத்துக் கொண்டு தொழில் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை என்றைஅது வகுத்து கொண்டு நோக்கங்களை அடிப்படையாக கொள்வதாகும்.

தொழிலின் பல்வேறு விதமான நோக்கங்கள் ஐந்து வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

அ. பொருளாதாரக் குறிக்கோள்கள்

தொழில்கள் பொருளாதார நோக்கம் என்பது இலாபம் ஈட்டுவதேஆகும்.
மேலும் இலாபம் ஈட்டுவதற்கு நுகர்வோரை உருவாக்குவதல், புதிய நுட்பங்களை கண்டுபிடித்தல், வளங்களை முழுமையாக பயன்படுத்துதல் போன்ற நோக்கங்களே மிக முக்கியமானதாகும்.

ஆ. சமூகக் குறிக்கோள்

சமூக நலனை பேணுவது என்பது சில தொழிலமைப்புகளை அறிய வகைகளை சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தப்பட வேண்டும்.
எந்த தொழில் நடவடிக்கைகளையும் சமுதாயத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமையக் கூடாது.

இ. நிறுவனக் குறிக்கோள்

தொழிலமைப்பின் மிக முக்கிய நோக்கம் தொடர்ந்து செயல்பாடுகள் மூலம் பொருளாதாரத்திற்கு உதவும் வகையில் அமையப்பெறவேண்டும்.
அவை நிறுவன விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கம், நுகர்வோருக்கு தரமான பொருள்களை வழங்குதல், நுகர்வோருக்கு திருப்திப்படுத்துதல் ஆகிய மூலமாக அமையலாம்.

ஈ. மனிதக் குறிக்கோள்

தொழிலமைப்பு தன்னுடைய பணியாளர் நலன் மற்றும் எதிர்கால தேவையைப் நிறைவேற்றக் கூடிய வகையில் செயல்படவேண்டும்.

மேலும் இயலாதவர்கள், ஏழ்மைநிலையில் உள்ளவர்கள் நலம் காக்க உதவ வேண்டும்.

பணியாளர்கள், பொருளாதார, சமூக, உளவியல் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவையாக அமைய வேண்டும்.

உ. தேசியக் குறிக்கோள்

தொழில் நிறுவனம், ஒரு நாட்டினுடைய மிக முக்கிய அங்கமாக கருதப்படுவதால் அவை நாட்டின் நோக்கங்களையும் விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது.

கடமை வகையில் தன்னுடைய குறிக்கோளை அமைத்து தெளிவு வேண்டும்.

ஒரு நாட்டின் நோக்கம் என்பது, மக்களுக்கு வேலை வாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவைஉற்பத்தியில் தன்னிறைவு அடைதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியவை மிக முக்கியமானதாகும்.

எனவே ஒரு தொழில் அமைப்பு தன்னுடைய குறிக்கோளை நிர்ணயம் செய்யும் போது மேற்கூறிய நோக்கங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

29. பொருளாதாரச் செயல்பாடுகள்	பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்
1.வரைவிலக்கணம்:வாழ்வாதாரத்திற்காக தேவையான பணம், நிதி சார்ந்த ஆதாயங்களை ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் செயல்பாடுகள் எனப்படும். எடுத்துக்காட்டு: பழவியாபாரி பழங்களைவிற்பது	மகிழ்ச்சி, அன்பு, இரக்கம், உணர்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஆகும். எடுத்துக்காட்டு: தாய் தன் குடும்பத்திற்காக உணவு சமைப்பது
2. நோக்கம்: இலாபம் ஈட்டுவது அல்லது நிதி சார்ந்த ஆதாயம் அடைவது ஒன்றே நோக்கம் ஆகும். எடுத்துக்காட்டு: ஒரு வழக்கறிஞர் தன் பணியைச் செய்வது	சமூக, உளவியல், உணர்வு ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகும். எடுத்துக்காட்டு: கோவிலுக்கு செல்வது
3. பணத்தின் அடிப்படையில் அளவிடல்: அனைத்து பொருளாதாரச் செயல்பாடுகளையும் பண மதிப்பின் அடிப்படையில் அளவிடலாம். எடுத்துக்காட்டு: ஒரு மருத்துவர் ஆலோசனைக் கட்டணம் ரூ.500 வசூலித்தல்	பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளை பணமதிப்பின் அடிப்படையில் அளவிட முடியாது. இவைகள் எண்ணம், உணர்வுகள் ஆகியவற்றின் வெளிப்பாடு ஆகும். எடுத்துக்காட்டு: ஒரு அரசு சாரா அமைப்பு ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக உடைகள் வழங்குவதைக் கூறலாம்.
4. உறவு: பொருளாதார நடவடிக்கைகள் செல்வத்தை உருவாக்குவதுடன் தொடர்புடையவை. எடுத்துக்காட்டு: ராம் என்பவர் சொந்தமாக வீடு வாங்குவதற்காக தனது ஊதியத்தின் ஒரு பகுதியை சேமித்து வருவது	பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகள் செல்வத்தை உருவாக்குவதில்லை, எடுத்துக்காட்டு: நன்கொடையாகப் பெற்ற பணத்தை அறக்கொடை பணிகளுக்கு செலவிடுவது
5. விளைவு: அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் விளைவு பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி, கொள்முதல், விநியோகம், நுகர்வு ஆகும். எடுத்துக்காட்டு: நோக்கியா நிறுவனம் கைபேசிகளைஉற்பத்தி செய்து, விநியோகித்து இந்தியா முழுவதும் விற்பனை செய்கிறது.	பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகளின் இறுதி விளைவு நடவடிக்கைகள் மேற்கொள்பவரின் மனம், உணர்வு, உளவியல் சார்ந்த மனநிறைவு ஆகும். எடுத்துக்காட்டு: சோனா என்பவர் ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி புகட்டுதல்
6. கால அளவு: பொருளாதார நடவடிக்கைகள் திரும்பத் திரும்ப நிகழும் தன்மை கொண்டது. எடுத்துக்காட்டு: குல்பி ஐஸ்கிரீம் விற்பவர் நாள்தோறும் மாலை வேளைகளில் விற்பார்.	இவை தொடர்ந்து நிகழாது. மேலும் நேரம் கிடைக்கும் பொழுது நிகழும். எடுத்துக்காட்டு: ஆதரவற்றோர் இல்லம் சென்று பார்த்தல்.
7. உருவாக காரணம்: பொருளாதார நடவடிக்கைகள் மனித விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்படுகிறது.	பொருளாதாரச் சார்பற்ற நடவடிக்கைகள் உணர்வு பூர்வமாக மகிழ்ச்சியினை அனுபவிக்க செய்யப்படுகிறது

தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு - ஓர் ஒப்பீடு

தொழில்	சிறப்புத் தொழில்	வேலைவாய்ப்பு
1. **உருவாக்கும் முறை** தோற்றுவிப்பாளர்களின் முடிவுகள், பதிவு மற்றும் பிற நடைமுறைகள் அனைத்தும் சட்டத்திற்குட்பட்டது.	சிறப்புத் தொழில் அமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல்.	சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பது, நியமன கடிதம்.
2. **பணியின் தன்மை** சரக்கு மற்றும் சேவையை பொது மக்களுக்கு அளித்தல்.	சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல்.	பணியாளர்களுக்கு வழங்கிய செயலை செய்தல்.
3. **தகுதி** குறைந்தபட்ச தகுதி என்று ஏதுமில்லை.	குறிப்பிட்டபிரிவில் சிறப்பு தகுதியும் / பயிற்சியும் பெறுதல்.	குறைந்தபட்ச தகுதி தேவையில்லை.
4. **அடிப்படை நோக்கம்** சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்து இலாபம் ஈட்டுதல்.	சேவைபுரிதல்	முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன் கூலி / சம்பளம் பெறுதல்
5. **மூலதனம்** நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மூலதனஅளவு மாறும்.	இதை உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி தேவைப்படும்.	மூலதனம் ஏதும் தேவையில்லை.
6. **வெகுமதி** இலாபம்	தொழில் முறை கட்டணம்	கூலி / சம்பளம்
7. **இடர்** இலாபம் நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும்.	கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது	நிலையான கூலி / சம்பளம் இடர் எதுமில்லை
8. **உரிமை மாற்றம்** சில நடைமுறைகளை பின்பற்றி உரிமை மாற்றம் செய்யப்படும்	உரிமைமாற்றம் செய்ய இயலாது.	உரிமை மாற்றம் செய்ய முடியாது.
9. **நெறிமுறை** குறிப்பிட்ட நடத்தை விதிகள் ஏதும் இல்லை ஆனால் நன்நெறி அடிப்படையில் தொழில் நடத்தப்பட வேண்டும்.	சிறப்புத் தொழில் சார்ந்த நடத்தை நெறிகள் பின்பற்ற வேண்டும்.	பணியாளர் நிறுவனத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைக்கு உடன்பட்டு நடந்து கொள்ள வேண்டும்.